டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 142 | 16.11.2025 | SUNDAY | IPPASI : 29 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 142 | 16.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி : 29 | விலை : ரூ.5/- |

3 'எஸ்ஐஆர் வந்த பிறகு...' தேர்தல் ஆணையத்தை விளாசும் எம்பி ஆ.ராசா

4 அழிந்து வரும் மண்பாண்ட தொழிலை மீட்டெடுக்க வேண்டும்: அரசுக்கு தொழிலாளர்கள் வலியுறுத்தல்

2 "தமிழகத்திலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும்" நயினார் நாகேந்திரன் நம்பிக்கை

# சென்னையில் தூய்மைப் பணியாளர்களுக்கு கழிப்பறை வசதியுடன் ஓய்வு அறைகள்: முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை: நவ.16-

சென்னையில் தூய்மைப் பணியாளர்களுக்கு 300 சதுர அடியில் கழிப்பறை வசதியுடன் ஓய்வு அறைகள் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, குடியிருப்புகளுக்கான வீடுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய நிகழ்ச்சி சென்னை, கலைவாணர் அரங்கில் இன்று நடைபெற்றது. அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசும்போது, "சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும், தூய்மைப் பணியாளர்களுக்காக பிரத்யேகமாக, 300 சதுர அடி அளவில் உடை மாற்றும் அறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் ஓய்வறைகள் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு அவைகள் கொண்டு வரப்படும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கின்ற இந்த முதலமைச்சரின் உணவுத்திட்டம் வருகின்ற டிசம்பர் 6ஆம் தேதி முதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

நான் ஏற்கனவே சொன்னது போல, உங்களுடைய மற்ற கோரிக்கைகள் படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும்! என்னைப் பொறுத்தவரைக்கும், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருபவர்களுக்கு சென்னை தான் இந்தியாவிலேயே



"கிளீன் சிட்டி", தமிழ்நாடு தான் "கிளீன் ஸ்டேட்" என்று சொல்ல வேண்டும்! அதற்கு நீங்கள் எல்லோரும் துணை நிற்கவேண்டும்.

எதிர்காலத்தில், மேற்கத்திய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் இருப்பதுபோல, மக்கள் அனைவரும் சுய ஒழுக்கத்தை நூறு விழுக்காடு கடைப்பிடிப்பவர்களாக முன்னேறி, குப்பைகளை ஒழுங்காக தரம் பிரித்துப் போட்டு, தூய்மைப் பணியாளர்களின் சுமை பெருமளவில் குறைக்க வேண்டும். தூய்மைப் பணியாளர் என்பது மற்ற எந்தப் பணியையும் போன்ற பணியாக கருதப்படுகின்ற அளவுக்கு இவர்களுடைய கண்ணியமும், முறையான பணிச்சூழலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

என்னுடைய கனவு உங்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும். உங்களுடைய உடல்நலம் பாதுகாக்கப்பட வேண்டும். உங்களுடைய பிள்ளைகள் நன்றாக படித்து, உயர்ந்த பொறுப்புகளில் உட்கார வேண்டும். சுய ஒழுக்கம் இல்லாமல், முழுமையான வளர்ச்சியோ, சமூக மேன்மையோ அடைவதற்கு சாத்தியமே கிடையாது. அரசு தன்னுடைய கடமையை செய்யும். மக்களும் பொறுப்பாக இருந்து, பொது இடங்களிலும், நம்முடைய மனங்களையும் தூய்மையாக வைத்திருப்போம். அதற்காக தொடர்ந்து உழைப்போம்! தன்னலம் கருதாத தூய்மைப் பணியாளர்களின் சேவையை போற்றுவோம்." என்றார்.

## திருநெல்வேலி இராதாபுரம் சட்டமன்ற தொகுதி 2026 தேர்தல் குறித்து பாஜகவினர் ஆலோசனை கூட்டம்



■ திருநெல்வேலி தெற்கு மாவட்ட துணை தலைவர் ஜெகநாதன் அவர்கள் தலைமையில், இராதாபுரம் வடக்கு ஒன்றிய தலைவர் செ.த.தினகரன் அவர்கள் முன்னிலையில் இராதாபுரம் சட்டமன்ற தேர்தல் இணை அமைப்பாளர் அம்மா செல்வகுமார் அவர்களை நேரில் சந்தித்து, 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து ஆலோசனை செய்தபோது. உடன் மகராஜன் உவரி பிரபு ரங்கநாதன் கோபி சக்திவேல் மணிகண்டன் ராஜன் சுப்பிரமணியன்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## சக்கர வியூகம் செய்தி எதிரொலி

பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்த இந்து சமய அறநிலையத்துறை ( HR & CE ) மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் பணிபுரிந்து வந்த, இரண்டாம் நிலை செயல் அலுவலர் கார்த்திகேயன் நாகப்பட்டினம் மண்டலத்திற்கு பணியிட மாற்றம்

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## கோவை வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கருப்புக்கொடி நாளை டெல்லியில் பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம்

### திருச்சியில் அய்யாக்கண்ணு, விவசாய சங்க தலைவர்கள் கூட்டாக பேட்டி

திருச்சி நவ.16

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் வக்கீல் அய்யாக்கண்ணு, விவசாய சங்க தலைவர் நாகை காவிரி தனபாலன், தமிழ்நாடு கள் இயக்க தலைவர் நல்லசாமி ஆகியோர் திருச்சி பிரஸ் கிளப்பில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:

1. காவிரியில் மாதந்தோறும் நீர் பங்கீடு செய்வதை நிறுத்தி தினந்தோறும் நீர் பங்கீடு செய்து தமிழகத்துக்கு வழங்க வேண்டும்.

2. மேகதாதுவில் அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும்,

3. மரபணு திருத்தப்பட்ட பயிர்களை ஊக்குவிப்பதற்கு 500 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்ததற்கு, கண்டனம் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை வரவுள்ள பிரதமர் நரேந்திர மோடியை கண்டித்து கருப்பு கொடி காட்டும் போராட்டம் வரும் 19ந்தேதி நடத்த உள்ளோம். மேலும் விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்க



வேண்டும்.விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தனிநபர் இன்சூரன்ஸ் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் நாளை (17ந்தேதி) நூற்றுக்கணக்கான விவசாயிகள் திருச்சியில் இருந்து டெல்லி செல்கின்றனர்.டெல்லியில் பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும்.

பீகார் தேர்தலில் கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த வகையில் வருகிற ஜனவரி மாதம்

கள் விடுதலை மற்றும் மதுவிலக்கு மாநாடு நடத்த உள்ளோம். இது 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

பேட்டியின் போது விவசாய சங்கத் தலைவர்கள் தஞ்சை பழனியப்பன், தீட்சிதர் பாலசுப்ரமணியன், அர்ஜுனன், வாரணவாசி ராஜேந்திரன், நாகை ராமதாஸ்,தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மேகராஜன் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

## திசையன்விளை போஸ்ட் ஆபீஸில் மீண்டும் ரயில் முன்பதிவு சேவை துவங்குமா?


திசையன்விளை, செப்,16

திசையன்விளை போஸ்ட் ஆபீஸில் மீண்டும் ரயில் டிக்கெட் முன்பதிவு சேவை துவக்க நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் திசையன்விளை வட்டாரம், கூட்டம் சங்க அலுவலகத்தில் வைத்து நடந்தது. சங்கத் தலைவர் ஜெயராமன் தலைமை வகித்தார். செயலாளர் ராஜாஸ் எட்வர்ட் ஜார்ஜ் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக, திசையன்விளை போஸ்ட் ஆபீஸில் இயங்கி வந்த, ரயில் டிக்கெட் முன்பதிவு சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் மிகவும் அவதி அடைந்து வருகின்றனர், எனவே நிறுத்தப்பட்ட ரயில் டிக்கெட் முன்பதிவு சேவையை உடனே மீண்டும் துவக்க வேண்டும் எனவும், மழைக்காலங்களில் திசையன்விளையில் அதிகம் தண்ணீர் தேங்கும் ரோடுகளான, உடன்குடி ரோட்டில், நேருஜி திடல் அருகே உள்ள கால்வாயையும், ஜேம்ஸ் ரோட்டில் தாம்போதி அருகில் உள்ள கால்வாயையும் அகலப்படுத்த வேண்டும் என கோரியும், திசையன்விளை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# விஜய்க்கு எதிர் உதய்? திட்டத்துடன் காய் நகர்த்தும் திமுக



சென்னை, நவ16-

சென்னை.விஜய் விவகாரத்தில் உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினையாற்றி அவரை பெரியாளாக்கி விடவேண்டாம் என்று நினைத்து மிகவும் ஜாக்கிரதையாக வார்த்தைப் பிரயோகங்களைச் செய்து வந்தார் திமுக தலைவர் ஸ்டாலின். ஆனால், அதையெல்லாம் அப்படியே கவிழ்த்துப் போட்டிருக்கிறார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

அரசியலில் அடியெடுத்து வைத்ததுமே தனது முதல் எதிரியாக திமுகவை தான் குறித்து வைத்துத் தாக்கினார் விஜய். ஆளும் அதிகாரத்தில் இருக்கும் திமுக தனது கூட்டணியையும் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதால் அந்த மாளிகையின் மீது கல் வீசினால் தான் ஏதாவது காரிய பலம் கிட்டும் என விஜய்க்கு பாலபாடம் படிக்கப்பட்டது. அதன்படியே அவர் திமுகவையும் ஸ்டாலினையும் மிகக் கடுமையாக சாட ஆரம்பித்தார்.

ஒரு கட்டத்தில் இந்த சாடல்கள் எல்லை மீறிப் போய், "ஸ்டாலின் அங்கிள்" என்றும், "சி.எம் சார்" என்றும் கிண்டலடித்ததை பார்த்துவிட்டு திமுகவினர் கொதித்தே போனார்கள். இதையடுத்து, கீழ்மட்டத் தொண்டர்கள் சமூக வலைதளங்களில் விஜய்யை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் முதல்வர் ஸ்டாலினோ, கட்சியின் இரண்டாம்கட்டத் தலைவர்களோ, அமைச்சர்களோ விஜய்க்கு பதில் சொல்வதையும் தவெகவை விமர்சிப்பதையும் பொதுவாக தவிர்த்தார்கள். கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் செந்தில் பாலாஜியையும், தங்கள் அரசையும் தவெகவினர் கடுமையான வார்த்தைகளில் தாக்கியதையும் பொறுத்துக் கொண்டது திமுக.

இப்படியான நிலையில்தான், துணை முதல்வர் உதயநிதி தற்போது இந்த ஆட்டத்தை முழுமையாகக் கலைத்துப் போட்டிருக்கிறார். அண்மையில் சென்னையில் நடைபெற்ற 'திமுக 75 அறிவுத் திருவிழா'வில் பேசிய உதயநிதி, "அரசியலில் சிலர் அடித்தளமே இல்லாமல் உள்ளே வர முயற்சிக்கின்றனர். பொருட்காட்சியில் தாஜ்மஹால், ஈஃபிள் டவர் செட் போட்டால் அதைப் பார்க்க கூட்டம் கூடத்தான் செய்யும். ஆனால், சும்மா தட்டினாலே போதும், அதெல்லாம் விழுந்துவிடும். அத்தனையும் வெறும் அட்டை" என்று தவெகவை மறைமுகமாக விமர்சித்தார்.

எப்போது திமுக தலைவர்கள் தங்களை விமர்சிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த தவெகவினர், உதயநிதியின் அட்டாக்கை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். இதற்கும், "திமுகவை எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூடப் பார்க்கமுடியாது" என்று கர்ஜித்த முதல்வருக்கும் சேர்த்து, எக்ஸ் தளத்தில் தானே பதில் கொடுத்த விஜய், 'ஆட்சி அதிகாரத்தில் இருந்து அதிவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படப் போகும் அதிகார மமதை கொண்ட கட்சி' என்று திமுகவை கடுமையாக விமர்சித்ததுடன், 'இப்போதெல்லாம் அந்தக் கட்சியின் ஒரே இலக்கு, நம்மைத் தூற்றுவதே. தவெகவை மட்டும் மூளையில் தேக்கி யோசிப்பதே அதன் முழுநேர வேலை என்றாகி விட்டது. பவளவிழா பாப்பா நீ பாசாங்கு காட்டல் ஆகாது பாப்பா, நீ நல்லவர் போல நடிப்பதைப் பார்த்து நாடே சிரிக்கிறது பாப்பா' என்று போட்டுத் தாக்கினார்.

விஜய்க்கெல்லாம் பதில் சொல்லி அவரை பெரியாளாக்க வேண்டாம் என்ற திமுக தலைமையின் உறுதியை உதயநிதி குலைத்துப் போட்டதற்குப் பின்னால் முக்கியமான அரசியல் கணக்கு இருக்கிறது என்று சொல்லும் அரசியல் பார்வையாளர்கள், "தற்போதைய சூழ்நிலையில் தமிழக அரசியலில் தவெக தவிர்க்க முடியாத சக்தியாக மாறியிருக்கிறது. அதிலும், திமுகவுக்கும் தங்களுக்கும் தான் போட்டி என்று மீண்டும் மீண்டும் விஜய் சொல்லி வரும் நிலையில், அதை வைத்து உதயநிதியை முன்னிலைப்படுத்த திமுக திட்டமிட்டிருக்கிறது.

உதயநிதி இப்படி பேசியிருப்பதன் மூலம் தமிழக அரசியலில் 'விஜய்க்கு எதிர் உதயநிதி' என்கிற தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள். ஸ்டாலினுக்கு எதிர் விஜய் என்பதை விட உதயநிதிக்கு எதிர் விஜய் என்பது எதிர்கால திமுக அரசியலுக்கு சரியாக இருக்கும் என்பது அவர்களது கணக்கு. அதன் விளைவு தான் உதயநிதியின் சீண்டல். இதன்மூலம் விஜய்யை எதிர்க்க உதயநிதி தான் சரியான சாய்ஸ் என்ற கருத்தை திமுகவினர் மத்தியிலும் விதைக்கிறார்கள். திமுக தலைமை எதிர்பார்ப்பது போல், பிற்காலத்தில் இவர்கள் இருவருக்குமான களமாகவும் தமிழக அரசியல் மாறலாம்" என்கிறார்க

# "தமிழகத்திலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும்" நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



சென்னை, நவ16-

சென்னை.பிஹாரை அடுத்து, 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலிலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும் என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

பிஹார் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், பெருவாரியான இடங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலை வகித்தது. முன்னணி நிலவரங்கள் வெளியாகிக் கொண்டிருந்த சமயத்தில் நெல்லையில் செய்தியாளர்களிடம் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: பிஹார் மாநிலத்தில் உள்ள 243 தொகுதிகளில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 190 இடங்களில் முன்னணியில் உள்ளது. இது எங்கள் கூட்டணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. அந்த மாநிலத்தில் ஏற்கெனவே நடந்துவரும் நல்லாட்சியை மக்கள் அங்கீகரித்துள்ளனர்.

அத்துடன், தொடர்ச்சியாக இண்டியா கூட்டணியை மக்கள் புறக்கணித்துக் கொண்டே வருகிறார்கள். இண்டியா கூட்டணிக்கு தேசிய அளவில் தொடர் தோல்விகள் ஏற்பட்டு வருகிறது. பிஹாரை அடுத்து, 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலிலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும். தேர்தல் ஆணையம், அமலாக்கத் துறை, வருமான வரித் துறை இவையெல்லாமே சுதந்திரமாகச் செயல்படும் தனிப்பட்ட அமைப்புகள்.

இவற்றை, அரசியல் கட்சியுடன் ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல. கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றி பெற்றபோது, தேர்தல் ஆணையம் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது? திமுக ஜெயித்தால் தேர்தல் ஆணையம் நன்றாக செயல்படுகிறது என்று அர்த்தம். தோற்றுவிட்டால் தேர்தல் ஆணையம் ஒரு சாராருக்கு ஆதரவாக செயல்படுகிறது என்று அர்த்தமா? இப்படிப் பேசுவது முற்றிலும் சந்தர்ப்பவாத அரசியல்.

தேர்தல் ஆணையத்தின் மீது இப்படியெல்லாம் அவதூறு பரப்பியவர்களை பிஹார் மக்கள் புறக்கணித்துள்ளனர். அங்கு இந்தியா கூட்டணியின் தோல்விக்கு இதுவே முக்கிய காரணம். பிஹாரில் தேசிய ஜனநாயக கூட்டணி பெற்றிருக்கும் இந்த வெற்றியானது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# தமிழகத்தில் மின்மாற்றி கொள்முதலில் முறைகேடு: சிபிஐ விசாரணைக்கு அன்புமணி வலியுறுத்தல்

சென்னை:, நவ.16-

சென்னை: மின்மாற்றி கொள்முதலில் நடைபெற்ற ஊழல் குறித்து சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு கூடுதல் விலை கொடுத்து 45,800 மின்மாற்றிகள் வாங்கப்பட்டது குறித்து வழக்கு தொடர்ந்து விசாரணை நடத்த வேண்டும் என்று தமிழக காவல்துறையின் லஞ்ச தடுப்புப் பிரிவிடம் புகார் அளித்து 30 மாதங்கள் ஆகும் நிலையில் இன்றுவரை வழக்குப்பதிவு செய்யப்படவில்லை.

இந்தமுறைகேடுகளில் முதல் எதிரியாக விசாரிக்கப்பட வேண்டியவர் மின்துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி. 2வது எதிரி மின்வாரிய முன்னாள் தலைவர் ராஜேஷ் லகானி. அவர் பாதுகாப்பான முறையில் மத்திய அரசு பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார். 3வது எதிரி மின் வாரிய நிதி கட்டுப்பாட்டாளர் வி.காசி. இவரது வீட்டில் வருமானவரித் துறை அண்மையில் சோதனை நடத்தியது.

ஆனால், அவருக்கு மின்வாரியத்தின் தலைமை நிதிக் கட்டுப்பாட்டாளராக திமுக அரசு பதவி உயர்வு கொடுத்து கவுரவித்துள்ளது. மின்மாற்றி கொள்முதலில் தொடர்புடைய எதிரிகள் மீது வழக்கு தொடர்வதற்கு பதிலாக, அவர்களுக்கு சன்மானம் வழங்கும் திமுக ஆட்சியில், இந்த ஊழல் வழக்கில் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் கட்டாயம்: உத்தரவை எதிர்த்து வழக்கு



சென்னை, நவ16-

சென்னை மாநகராட்சி சார்பில் வளர்ப்பு நாய் மற்றும் தெரு நாய்களுக்கு சிப் பொருத்தப்படுகிறது. இதற்காக ஐஸ் ஹவுஸ் பகுதியில் ஆட்டோவில் நாய்களை அழைத்துச் செல்லும் நபர்.

சென்னை: சென்னையில் வளர்ப்பு நாய்கள் சாலைகளில் நடந்து செல்வோரை கடித்துக் குதறும் சம்பவங்கள் அதிகரித்தன. இதையடுத்து வளர்ப்பு நாய்களை பதிவு செய்து உரிமம் பெறாவிட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்றும், வாய் கவசம் அணியாவிட்டால் ரூ. 500 அபராதம் விதிக்கப்படும் என்றும் சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

இந்த உத்தரவை எதிர்த்து, இந்திய கால்நடைகளுக்கான மக்கள் அமைப்பு சார்பில் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், 'ஒரு தனிநபருக்கு 4 வளர்ப்பு நாய்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்படும் என மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது. கைவிடப்பட்ட, காயமடைந்த நாய்களை எடுத்து வளர்க்கும் எங்களைப் போன்ற அமைப்புகளுக்கு இதில் விலக்கு அளிக்க வேண்டும்.

உரிமம் பெறாவிட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் தெருவில் அநாதையாக விடப்படும் நாய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்' என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, சென்னையில் ஒரு லட்சம் வளர்ப்பு நாய்கள் இருப்பதாகவும், அதில் 31 ஆயிரம் நாய்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, எஞ்சிய 69 ஆயிரம் நாய்களையும் நவ.24க்குள் பதிவு செய்ய முடியுமா? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு மாநகராட்சி தரப்பில், தினமும் 5 ஆயிரம் நாய்களை பதிவு செய்ய முடியும் என்றும், உரிமம் கோரி விண்ணப்பிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கையை பொறுத்து அதற்கான கால அவகாசத்தை நீட்டிப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் பதிலளிக் கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, மனுதாரர் எழுப்பியுள்ள பிரச்சினைகள் குறித்து மாநகராட்சி தரப்பில் விளக்கமளிக்க உத்தரவிட்டு விசாரணையை நவ.25ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு



திண்டுக்கல், நவ.16-

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்தம் 2026 நடைபெற்று வருகின்றது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2,124 வாக்குச்சாவடி மையங்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை (Enumeration Form) கடந்த 04.11.2025 முதல் 93%

வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகள் தொடர்ந்து 04.12.2025 வரை நடைபெறவுள்ளது.

இப்பணியில் சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள், தேர்தல் பிரிவு பணியாளர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7

சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2,124 வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வழங்குவதனை எளிமைப்படுத்தும் வகையிலும் 15.11.2025 (சனிக்கிழமை) மற்றும் 16.11.2025 (ஞாயிறுக்கிழமை) ஆகிய இரண்டு தினங்கள் (SIR) சிறப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டது.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் 132திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.



■ திருமுருகன்பூண்டி நகராட்சி 23 வது வார்டு பகுதி நெசவாளர் காலனியில் 400 மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் ஏற்கனவே நல்லாற்று கரை ஓரப்பாதையில் சென்று கொண்டிருந்தனர். இப்போது பாதை அடைபட்ட ஆக்கிரமைப்பை அகற்றி பாதை மீட்டுதரக்கோரி, 12.11.25 புதன்கிழமை நகராட்சி எதிரில் பொதுமக்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடபெற்றது. இது சம்பந்தமாக பூண்டி நகராட்சி தலைவர் குமார் அவர்கள் நல்லாற்றில் ஆய்வு செய்த பின்னர், J.C.P மூலமாக பாதை மீட்டு தருவதாக நெசவாளர்காலனி பொதுமக்களிடத்தில் உறுதியளித்தார். பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# திருட்டு வாக்களிக்க முடியாது என்பதால் எஸ்ஐஆரை எதிர்க்கும் திமுக! பழனிசாமி பகிரங்க குற்றச்சாட்டு



சென்னை, நவ.16-

சென்னைதிருட்டு வாக்களிக்க முடியாது என்பதால்தான் எஸ்ஐஆரை திமுக எதிர்ப்பதாக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் பல்வேறு விமர்சனங்கள் செய்தன. அதையெல்லாம் மீறி தேசிய ஜனநாயக கூட்டணி பிஹார் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. அதேபோல, வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்தவர்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. எஸ்ஐஆர் பணி மேற்கொள்ளும் போது, இவர்களை எல்லாம் கண்டறிந்து நீக்கப்பட்டு உண்மையான நேர்மையான வாக்காளர்களைக் கொண்டு பட்டியல் தயாரிக்கப்படும்.

இந்த பணியின்போது பிஎல்ஓக்கள் வீடுவீடாகச் சென்று படிவத்தை வழங்கிடவேண்டும். ஆனால், தமிழகத்தில் இப்பணி சுணக்கமாக இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் பிஎல்ஓவாக நியமிக்கப்பட்டவர்கள் 4ம் வகுப்புதான் படித்துள்ளனர். இதை நாங்கள் தெரிவித்தும் மாற்றாமல், வேண்டுமென்றே திட்டமிட்டு எஸ்ஐஆர் பணி முறையாக நடைபெறக்கூடாது என சில அதிகாரிகள் செயல்படுகின்றனர். திமுக அரசு வாய்மொழி உத்தரவாக இவ்வாறு சொல்லி இருப்பதாக நாங்கள் அறிகிறோம். இது கண்டிக்கத்தக்கது.

பிஎல்ஓக்களாக தகுதியானவர்களை நியமிக்காததால் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுகின்றன. இனி மேலாவது தேர்தல் ஆணையம் விழிப்போடு செயல்பட்டு, எஸ்ஐஆர் பணிக்கு முரண்பாடாக செயல்படுவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் இறந்தவர், இடம் பெயர்ந்தவர், இரட்டை வாக்குரிமை உடையோர் குறைந்தபட்சம் 5 ஆயிரம் பேர் உள்ளனர். இதுகுறித்து நாங்கள் தொகுதிவாரியாக விவரங்களை கொடுத்தும் நீக்கவில்லை. இதனை பயன்படுத்தி, திமுக தேர்தல் நேரத்தில் கள்ள வாக்களித்து வெற்றிபெற்று வருகிறது. திருட்டு வாக்களிக்க முடியாது என்பதால்தான் எஸ்ஐஆரை எதிர்க்கிறார்கள். சென்னை மாநகராட்சி தேர்தலில் திருட்டு வாக்களிக்க வந்தவரை பிடித்து கொடுத்ததற்காக 15 நாள் சிறையில் அடைத்தார்கள். அப்படிப்பட்ட நிலை, வரும் தேர்தலில் வரக்கூடாது என்பதற்காகத் தான் எஸ்ஐஆரை நாங்கள் ஆதரிக்கிறோம்.

எஸ்ஐஆர் பணியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்பதற்காக திமுக பல்வேறு காரணங்களை கூறி வருகிறது. எஸ்ஐஆர் பணிக்கு ஒரு மாதகாலம் போதுமானது. முறைகேடாக வாக்காளர்களை சேர்ப்பது திமுகவுக்கு கைவந்த கலை. ஆர்கே நகரில் மட்டும் 31 ஆயிரம் வாக்குகள் நாங்கள் நீதிமன்றம் சென்றதால் நீக்கப்பட்டுள்ளன. ஒரு தொகுதியில் இவ்வளவு என்றால் அனைத்து தொகுதிகளுக்கும் சேர்த்து 60 லட்சம் வாக்குகள் கூட வரலாம். இந்த கட்சி அந்தக் கட்சி என பார்க்காமல், நேர்மையான முறையில் வாக்காளர்கள் இடம் பெற வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்

# 3% அகவிலை படியை உயர்த்தி வழங்கிய, சிறந்த திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி

## தமிழ்நாடு அரசு அலுவல ஒன்றிய மாநிலத் தலைவர் வெ.மகேந்திர குமார் நெஞ்சார்ந்த நன்றி



தமிழ்நாடு அரசின் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களில் முதன்மையானதும் அங்கீகாரம் பெற்று 100 ஆண்டுகளை கடந்து மாபெரும் இயக்கமாக திகழ்ந்து வரும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக, தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களுக்கும் எங்களது கோரிக்கையை ஏற்று 3% அகவிலை படியை உயர்த்தி வழங்கிய, சிறந்த திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு அரசு அலுவல ஒன்றிய மாநிலத் தலைவர் வெ.மகேந்திர குமார் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தார். விரைவில் உங்களுடைய தலைமையின் கீழ் செயல்படும் திராவிடம் மாடல் அரசு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின் பிரதான கோரிக்கையாக உள்ள பழைய ஓய்வூதிய திட்டத்தை அனைவருக்கும் நிறைவேற்றுவீர்கள் என்று முழு நம்பிக்கையில் நாங்கள் அனைவரும் உள்ளோம் என்பதையும் தெரிவித்தார்.

# எஸ்ஐஆரை ஆதரித்து அதிமுக நீதிமன்றம் சென்றது வெட்கக்கேடு: முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்



சென்னை, நவ.16-

சென்னை.வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) குறித்து நாடே புலம்பும் போது, அதை ஆதரித்து அதிமுக உச்சநீதிமன்றம் சென்றது வெட்கக் கேடானது என்று கொளத்தூரில் நேற்று நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

சென்னை, கொளத்தூர் தொகுதியில் நேற்று 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' தலைப்பில் பாக முகவர்கள், நிர்வாகிகள் கூட்டம் தமிழக முதல்வரும் கொளத்தூர் தொகுதி உறுப்பினருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் பேசியதாவது: இன்றைக்கு நாம் எங்கு சென்றாலும் எஸ்ஐஆர் பற்றி தான் பேசுகின்றனர். மக்கள் ஒவ்வொருவ ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய ஆட்சியாளர்கள் இத்தகைய சூழலை உருவாக்கியுள்ளனர். விசாரணை அமைப்புகளைப் போல் தேர்தல் ஆணையத்தையும் பயன்படுத்தி அப்படி ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளிப்படையாகவே வாக்குத் திருட்டு பற்றி குற்றஞ்சாட்டியுள்ளதுடன், ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே, நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புவது, தமிழகத்தில் உண்மையான வாக்காளர் ஒருவர்கூட பட்டியலில் இருந்து விடுபட்டுவிடக் கூடாது. இதற்காகதான் திமுக நீதிமன்றம் சென்றுள்ளது. மக்கள் மன்றத்திலும் விளக்குகின்றோம். அனைத்து கட்சிக் கூட்டம், ஆர்ப்பாட்டம் என நம் உணர்வுகளையெல்லாம் தொடர்ந்து வெளிப்படுத்தியிருக்கிறோம். வழக்கமாக தேர்தல் வெற்றிக்கான பொறுப்பை ஒப்படைப்பது போல், மக்களுடைய வாக்குரிமையைப் பெற்றுத்தரும் பெரும் பொறுப்பையும் கூடுதலாக உங்களிடம் ஒப்படைத்துள்ளோம். நமக்கு அதிக கால அவகாசம் இல்லை. நாம் வாக்காளராக சேர ஒரு படிவம் கொடுக்கிறார்கள். இன்றைக்கு தேதி 14. பத்து நாட்கள் முடிவடைந்து விட்டன. மீதி இருப்பது எத்தனை நாட்கள் என்று உங்களுக்குத் தெரியும். அந்த விண்ணப்பத்தை நாம் வாங்கிப் பார்க்கும் போது, நமக்குப் பெரிய குழப்பம் வருகிறது.

தமிழகம் இதுகுறித்து புலம்பிக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி போராட்டம் மூலம் எதிர்ப்பை பதிவு செய்து வருகிறார். கேரளாவில் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் சேர்ந்து பேராட்டம் நடத்தி, சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறது. அது எதிர்க் கட்சியாக இல்லை. இப்படியே சென்றுகொண்டிருந்தால் எதிர்க்கட்சியாக மட்டுமல்ல. உதிரிக் கட்சியாகக்கூட இருக்க முடியாத ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும். அதாவது தங்களுடைய கட்சியை டெல்லியில் கொண்டு

சென்று அடமானம் வைத்துவிட்டு அந்த எஸ்ஐஆரை ஆதரிக்கின்றனர். எஸ்ஐஆரை எதிர்த்து எல்லா கட்சிகளும் உச்சநீதிமன்றம் செல்கிறோம்.

ஆனால், இங்கு எதிர்க் கட்சியாக இருக்கும் அதிமுக அதை ஆதரித்து உச்சநீதிமன்றம் செல்லும் வெட்கக்கேடு நடைபெறுகிறது. மக்களைச் சந்திக்க அவர்களுக்குத் தெம்பு இல்லை. அதனால் தான் இந்தக் குறுக்கு வழியை அவர்கள் நாடியிருக்கிறார்கள். எனவே, தொகுதி முழுவதும் ஒரு பூத் விடாமல் சுற்றிச் சுழல வேண்டும். அந்தக் கணக்கீட்டுப் படிவங்களை நிரப்ப நாம் மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். கொளத்தூரில் வெற்றி என்பது, நிர்ணயிக்கப்பட்ட வெற்றிதான். அதில் எந்த சந்தேகமும் இல்லை.இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.





## சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த 50 பாஜகவினர், 10 அதிமுகவினர் பாஜக நிர்வாகி ராதா தலைமையில் அமைச்சர் பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

## மாற்றுக் கட்சியிலிருந்து திமுகவில் இருந்தவர்களை கழகம் கைவிடாது ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, நவ.16

மாற்றுக் கட்சியிலிருந்து திமுகவில் இணைந்தவர்களை கழகம் கைவிடாது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் பேசியதோடு திமுகவில் இணைந்த மேட்டுப்பட்டி பகுதி சேர்ந்த 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த 10 அதிமுகவினற்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த பாஜக ஐடி விங் செயலாளர் கோபாலகிருஷ்ணன் பொருளாளர் சூர்யா, ஐ .டி .விங்ஆன்மீக மண்டல செயலாளர் பாரதிராஜா, கிளைத்தலைவர்கள் ராஜன், புனிதா, நிர்மலா, சரவணன் உட்பட 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த அதிமுகவினர் 10 பேர் உட்பட 60 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகிபாஜக முன்னாள் மண்டல செயலாளரும் செயற்குழு உறுப்பினருமான ஜி ராதா தலைமையில் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டனர் திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்த அமைச்சர் பெரியசாமி அவர்கள்நான் முதன்முதலாக 1989 ஆம் வருடம்ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டபோது எனக்கு ஆதரவு அளித்த கிராமங்களில் சின்னாளபட்டியும் ஒன்று இன்று வரைஅவர்கள் கொடுத்து வரும் ஆதரவை என்னால் மறக்க முடியாது கடந்த 30 ஆண்டுகளாக மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் பலர் திமுகவில் இணைந்துள்ளனர் அவர்கள் திமுகவில் உயர் பதவியில் உள்ளனர் மேலும் அவர்கள் உள்ளாட்சி பதவியிலும் உள்ளனர் உள்ளனர் அதுபோல இன்று தங்களை தாய்க்கழகமான திமுகவில் இணைத்து கொண்ட அனைவரையும் ஒருபோதும் திமுக கைவிடாது அவர்களுக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன் மேலும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் அவர்களை அரவணைத்து கட்சி பணியாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்

திமுகவில் இணைந்து கொண்டவர்கள் தங்களுடைய மாற்றுக் கட்சியை சேர்ந்த அடையாள அட்டையை அமைச்சர் பெரியசாமி அவர்களிடம் வழங்கி வாழ்த்து பெற்றனர் நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்யமூர்த்தி ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன்,, திமுக நிர்வாகி அம்பை ரவி, பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், , அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார் ,முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்

# பிஹாரில் 10வது முறை முதல்வராகிறார் நிதிஷ்



புதுடெல்லி: நவ.16-

நாட்டில் மிக நீண்ட காலம் பதவி வகித்த முதல்வர்களில் நிதிஷும் இடம்பெற்றுள்ளார். சுமார் 20 ஆண்டுகும் மேலாக இவர் முதல்வராகப் பதவி வகிக்கிறார்.

முதன்முதலில் இவர் மார்ச் 3, 2000 அன்று முதல்வராகப் பதவியேற்றார். இந்த அரசு மெஜாரிட்டி நிரூபிக்க முடியாமல் அடுத்த 7 நாட்களில் கவிழ்ந்தது. ஓராண்டுக்கு பிறகு நடந்த தேர்தலில் ஆர்ஜேடி கட்சி சார்பில் லாலுவின் மனைவி ராப்ரி தேவி மீண்டும் முதல்வரானார். அதன்பிறகு நவம்பர் 2005 தேர்தலில் பெரும்பான்மை பெற்று நிதிஷ்குமார் முதல்வர் ஆனார்.

கடந்த 2010ல் நிதிஷ் 3வது முறை முதல்வரானார். கடைசி 2 ஆட்சியிலும் நிதிஷுக்கு பாஜக முழு ஆதரவளித்தது. பின்னர் 2014ல் பாஜக.வில் இருந்து நிதிஷ் பிரிந்தார். லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளத்தின் மெகா கூட்டணியில் இணைந்தவர் 2015ல் மகத்தான வெற்றி பெற்றார். இதில், முதல்வராக நிதிஷ் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். கடந்த 2017ல், அவர் மெகா கூட்டணியில் இருந்து பிரிந்து மீண்டும் என்டிஏ.வுக்கு திரும்பினார். 2020ல் மறுபடியும் முதல்வரான நிதிஷ்குமார், 2022ல் மீண்டும் என்டிஏ.வில் இருந்து வெளியேறி ஆர்ஜேடி, காங்கிரஸின் மெகா கூட்டணி சார்பில் முதல்வரானார்.

இதற்கிடையில் மே 24, 2024 முதல் 278 நாட்கள் ஜேடியு ஆட்சியில் ஜிதன்ராம் மாஞ்சி இடைக்கால முதல்வராக இருந்தார். ஜனவரி 2024ல், நிதிஷ் மீண்டும் மெகா கூட்டணியை விட்டு வெளியேறி பாஜகவுடன் இணைந்து, 9வது முறையாக முதல்வரானார். தற்போது தேர்தலில் வெற்றி பெற்றதால் 10வது முறையாக முதல்வர் பொறுப்பேற்க உள்ளார்.

பிஹாரில் கடந்த மாதம் 26ம் தேதி பெண்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அன்றைய தினமே இத்திட்டத்தின் கீழ் 1.5 கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளுக்கு தலா ரூ.10,000 டெபாசிட் செய்யப்பட்டது. பிஹார் தேர்தல் அறிவிப்பதற்கு முன்பு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதால், நிதிஷ் அரசு வாக்குகளை பணம் கொடுத்து வாங்குகிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. ஆனால், முதல்வர் நிதிஷ் தலைமையிலான என்டிஏ கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது.

பிஹார் தேர்தலில் 71 சதவீதத்துக்கும் அதிகமான பெண் வாக்காளர்கள் என்டிஏ.வுக்கு வாக்களித்தனர்.ரூ.10,000 நிதியைப் பெற்ற பெண்கள் மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தினரும் என்டிஏ.வுக்கு வாக்களித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் படி, பெண்கள் ரூ.10,000த்தை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. பெண்கள் சிறிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொள்ளவே இந்த தொகை வழங்கப்பட்டது. இதில் பெண்கள் வெற்றிகரமாக வேலைவாய்ப்பை உருவாக்கினால், அவர்களுக்கு கூடுதலாக ரூ.2 லட்சம் கடனை பிஹார் அரசு வழங்கும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற திட்டங்களால் முதல்வர் நிதிஷ் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்து தேர்தலில் வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# திருப்போரூர் அருகே பயிற்சி விமானம் கீழே விழுந்து விபத்து: பாராசூட் மூலம் உயிர் தப்பிய விமானி

மாமல்லபுரம், நவ.16-

மாமல்லபுரம் அருகே பயிற்சி விமானம் நேற்று விபத்துக்கு உள்ளானது. தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர், காயமடைந்த விமானியை ஹெலிகாப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். படங்கள்: எம்.முத்துகணேஷ்

திருப்போரூர்: திருப்போரூர் அருகே இந்திய விமானப் படை பயிற்சி விமானம் கீழே விழுந்து வெடித்து சிதறியது. இதில் விமானி பாராசூட் மூலமாக குதித்து உயிர் தப்பினார். செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் விமானபடை பயிற்சி தளம் உள்ளது. இங்கிருந்து நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புறப்பட்ட பயிற்சி விமானம் திருப்போரூர் அருகே வானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால், விமானி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அளித்து விட்டு, விமானத்தை கீழ்நோக்கி இறக்க முயற்சி செய்தநிலையில், விமானம் கட்டுப்பாட்டை இழந்ததால் விமானி பாராசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். பயிற்சி விமானம் புறவழிச் சாலை அருகே உள்ள உப்பளம் பகுதியில் விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

அந்த இடத்தில் இடத்தில் குடியிருப்போ, கட்டிடமோ இல்லாததால் பெரிய விபத்து ஏற்படவில்லை. தகவல் அறிந்த தாம்பரம் விமானப்படைஅதிகாரிகள், மீட்பு குழுவினர் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.விமானியை, ஹெலிகாப்டரில் மருத்துவமனை கொண்டு சென்றனர். திருப்போரூர் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதேபோல் புதுக்கோட்டை அருகே இன்ஜின் கோளாறு காரணமாக தனியார் பயிற்சி விமானம் ஒன்று நேற்று முன்தினம் சாலையில் தரையிறங்கியது குறிப்பிடத்தக்கது.

# 'எஸ்ஐஆர் வந்த பிறகு...' தேர்தல் ஆணையத்தை விளாசும் எம்பி ஆ.ராசா



சென்னை, நவ.16-

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூரில் நடைபெற்ற திமுக பயிற்சி கூட்டத்தில் கலந்துக்கொண்ட திமுக எம்பி ஆ.ராசா கூறியதாவது: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவில் நம்பர் ஒன் முதல்வராக பெயர் பெற்றுள்ளார். அவர் அறிமுகப்படுத்தி வரும் பல திட்டங்களை பிற மாநிலங்களும் மாதிரியாக கொண்டு செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

தேர்தல் ஆணையம், ஆணையாளர்கள் ஒழுங்காக இருந்தார்கள். தற்போது எஸ்.ஐ.ஆர் வந்த பிறகு நாம் ஒழுங்காக இருக்கின்றோம். தேர்தல் ஆணையம் திருடனாக மாறிவிட்டது. முன்பு தேர்தல் அறிவித்ததற்கு பிறகு தேர்தல் களம் சூடு பிடிக்கும். ஏன் என்றால் தேர்தல் ஆணையத்தில் திருடர்கள் இல்லை. தேர்தல் ஆணையம் திருடவில்லை. ஆனால் இன்றைக்கு யார் நியாயமாக இருக்க வேண்டுமோ அங்கே திருடர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்ளுக்கு தலைமை தாங்குவது பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

நாம் இவர்களிடமிருந்து ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கு போராடிக் கொண்டிருக்கின்றோம். தேர்தல் ஆணையத்தை திருடர்களிடமிருந்து பாதுகாக்க, ஜனநாயகத்தை காப்பாற்ற நாம் போராட வேண்டி உள்ளது.

மத்திய அரசு தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என எதுவும் செய்யவில்லை . மாறாக முன்னேறிய வகுப்பினருக்கு மட்டும் சலுகைகள் செய்து வருகிறது. நீட் தேர்வின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் 15 சதவீத அகில இந்திய இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடமில்லாத வகையில் அமைந்துள்ளது.


2026ம் ஆண்டில் நடைபெறுவது சாதாரண சட்டப்பேரவை தேர்தல் அல்ல. அது இந்தியாவை, இந்திய அரசியல் சட்டத்தை காப்பாற்ற வேண்டிய மிக முக்கியமான தேர்தல் ஆகும்.

இந்தியாவில் 2 பண்பாடுகள் உள்ளன. ஒன்று சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆரியப் பண்பாடு; அதற்கென இலக்கியமும் மொழிவளமும் இருக்கின்றன. அதை மறுப்பதற்கு இடமில்லை. மற்றொன்று தமிழை அடிப்படையாகக் கொண்ட திராவிடப் பண்பாடு. ஆணும் பெண்ணும் படித்தால்தான் அழகு என திராவிடம் சொல்லியது.

அதற்கு எதிரான எண்ணங்களை ஆரியம் முன்வைத்தது. ஆனால் , இன்றைக்கு எல்லாவற்றையும் ஒரே பண்பாடு, ஒரே தேசம் எனக் கலந்து, நமக்கான தனித்துவமான பெருமை இல்லாத நிலையை உருவாக்க முயல்கிறார்கள். இதனை காப்பாற்றக் கூடியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தான்.

தமிழனின் அடையாளத்தை அழிக்க முயன்றால், நாம் தனித்துத் தான் நிற்போம். இதனால் தான் நமது முதல்வர் மு.க. ஸ்டாலின், டெல்லிக்கு தமிழகம் 'அவுட் ஆப் கன்ட்ரோல்' என கூறுகிறார். அவரின் பொறுப்புகளை இந்தத் தேர்தலில் நாம் அனைவரும் காப்பாற்ற வேண்டும் என்றார் அவர்

# திருச்சியில் தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர், இயக்குனர் சங்க மாநில பொதுக்குழு கூட்டம்






திருச்சி, நவ.16

தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குனர் சங்கத்தின் சார்பில் மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் திருச்சிமத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள அருண் ஓட்டல் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் சங்கரப் பெருமாள் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் சதீஷ், மாநில பொருளாளர் சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயல் தலைவர் செல்வகுமார் கடந்த ஆண்டு சங்கத்தின் செயல்பாடு குறித்து பேசினார். திருச்சி மாவட்ட தலைவர் புகழேந்தி வரவேற்றார். மாநில பொருளாளர் வரவு செலவு கணக்குகளை தாக்கல் செய்தார்.கூட்டத்தில்

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் நடத்தப்படும் பாரதியார் தின குடியரசு தின குறுவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியினை போட்டிகள் தொடங்குவதற்கு முன்பாக வழங்கப்பட வேண்டும். அரசு நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா உடற்கல்வி பாட புத்தகங்கள் மற்றும் பாட புத்தகங்களுடன் சேர்த்து வழங்க வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடல்கல்வி இயக்குனர்களுக்கு நியமன கல்வி தகுதிக்கு மேல் பெற்ற உயர்கல்வினை வரிசை படுத்தாமல் இரண்டு ஊக்க ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில்திருச்சி மாவட்ட செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.இந்நிகழ்வில் ஏராளமான உடற்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டத்தில் 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பைக்கான வெற்றிக் கோப்பை மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளதையொட்டி, மதுரைசிவகங்கை சாலையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், மதுரை நாராயணா பள்ளி மாணவமாணவிகள் ஆகியோர் கலைநிகழ்ச்சிகள், வரவேற்ப்பு நடனம், அணிவகுப்பு மரியாதை போன்ற நிகழ்ச்சிகளுடன் பங்கேற்று சிறப்பான முறையில் வரவேற்பு அளித்தனர்.

# சின்னமனூரில் பாலியல் தொல்லை அளித்த ஆசிரியர் கைது



தேனி, நவ.16-

தேனி மாவட்டம் சின்னமனூரை சேர்ந்தவர் மாரிச்செல்வம் (வயது45). இவர் அப்பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

இவர் தேனி மாவட்டம் போடியில் நடந்த ஆசிரியர் பயிற்சிக்கு சென்றபோது அங்கு வந்த ஒரு ஆசிரியையுடன் பழக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து பெண் ஆசிரியை வீட்டுக்கு மாரிச்செல்வம் அடிக்கடி சென்று வந்துள்ளார். அதன்பின் நட்பு ரீதியான பழக்கத்தை தவறாக புரிந்து கொண்ட மாரிச்செல்வம் அந்த ஆசிரியைக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இதனால் அவருடன் பேசுவதை ஆசிரியை நிறுத்தி விட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த மாரிச்செல்வம் சமூக வலைதளங்களில் தவறாக சித்தரித்து செய்தி விடுவதா வெளியிடுவேன் என்றும், மிரட்டியுள்ளார்.

இதனால் பயந்துபோன ஆசிரியை இது குறித்து மாவட்ட எஸ்.பி. சினேகாபிரியாவிடம் புகார் அளித்தார். எஸ்.பி. உத்தரவின்பேரில் சின்னமனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆசிரியர் மாரிச்செல்வத்தை கைது செய்தனர்.

# அலங்காநல்லூர் கீழக்கரையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வடமாடு மஞ்சுவிரட்டு விழா





அலங்காநல்லூர், நவ.16-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில், அரசியல் அங்கீகாரம் பெற்றதற்கும், மணி விழாவை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு விழா நடைபெற்றது. மொத்தம் 17 காளைகள் அவிழ்த்து விடப்பட்டது. இதனை வீரர்கள் காளைகளை அடக்கி வெற்றி பெற்றனர். இதில் கல்லணை மணி பிரதர்ஸ், சத்திரப்பட்டி மருதுபாண்டியன் குழுவினர் வெற்றி பெற்று ரூ 10000 மற்றும் கேடயம் பரிசாக பெற்றனர்.முன்னதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் சிந்தனை வளவன் ஒன்றிய செயலாளர் பாலமுருகன் முகாம் செயலாளர் பிரவீன் குமார் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு வடமாடு மஞ்சுவிரட்டை கண்டு ரசித்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை பெரிய இலத்தைக் குளம்விடுதலை சிறுத்தைகள் முகாம் நிர்வாகிகள் செய்து இருந்தனர். அலங்காநல்லூர் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



■ மதுரை மத்திய சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலகத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை தொலைபேசி செயலி மூலம், பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# அழிந்து வரும் மண்பாண்ட தொழிலை மீட்டெடுக்க வேண்டும்: அரசுக்கு தொழிலாளர்கள் வலியுறுத்தல்



சேத்தியாத்தோப்பு, நவ.16-

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே டி.புத்தூர், பாழ்வாய்க்கால், சாத்தமங்கலம் உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட மண்பாண்ட தொழிலாளர் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்.

மண்பாண்டம் செய்வதை பல தலைமுறை களாக பாரம்பரியமாக செய்து வரும் இவர்கள் தற்போது பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பானை, விறகு அடுப்பு, சட்டி என பல வடிவங்களில் மண்பாண்ட பொருட்களை கலை நயத்தோடு செய்து வருகின்றனர்.

பாரம்பரிய மண்பாண்ட தொழில் வருங்காலத்தில் அழிந்து விடும் நிலையில் உள்ளது. தற்போது சிலர் மட்டுமே இத்தொழிலை செய்து வருகின்றனர். மண்பாண்டங்களை பொங்கல் பண்டிகையின்போது நியாயவிலை கடைகளில் மற்ற பொருட்களோடு மக்களுக்கு கிடைப்பதற்கு அரசு நேரிடையாக மண்பாண்ட பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும்.

மண்பாண்டங்களின் மகத்துவம் பற்றி பொதும க்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஆபத்தின் விளிம்பில் உள்ள இத்தொழிலுக்கு எவ்விதமான நிபந்த னைகள் இன்றி மண் எடுக்க அனுமதிக்க வேண்டும். மாதாந்திர வாழ்வாதார உதவி தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 5000 வழங்க வேண்டும்.

மண்பாண்ட தொழிலா ளர்கள் உற்பத்தி செய்யும் மண்பாண்ட பொருட்களை விற்பனை செய்ய அருகிலுள்ள நகரங்களில் அரசு கடை அமைத்து தர வேண்டும். மண்பாண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கு தொழிலாளர்களுக்கு போதிய பயிற்சி மற்றும் நிதியுதவி வழங்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை மண்பாண்ட தொழிலா ளர்கள் வைத்துள்ளனர்.

பாரம்பரிய மண்பாண்ட கலைஞர் களை வளர்வதற்கு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அதன்படி மண்பாண்ட தொழிலில் உள்ள நடைமுறை சிக் கலை போக்கி அவர்களிடம் உள்ள கலைத்திறனை வெளி உலகத்திற்கு கொண்டுவர வேண்டும்.

சுமார் ஒரு கிலோ களிமண்ணில் ஓராயிரம் வடிவங்களை சிற்பியாகி கலை நயமிக்க பொருட்களை செதுக்கும் திறன் பெற்றவர்கள் மண்பாண்ட தொழிலாளர்கள். தற்போது நம்மிடையே மாறிவிட்ட கலாச்சார மாறுபாட்டில் மண்பாண்டங்களை பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்த்து வருகிறோம். அதனால் நாம் பல்வேறு தொல்லை களையும் அனுபவித்து வருகிறோம்.

எனவே ஒவ்வொருவரும் சற்று சிந்தித்து மண்பாண்ட தொழிலை ஊக்குவித்து வளர்ச்சி அடைய வைக்க வேண்டும். அதனால் அகல் விளக்கு, மண்பானை, பொம்மைகள் உள்ளிட்ட பல்வேறு கைவினை தொழில்களை செய்து வரும் கலைஞர்களையும், அவர்கள் குடும்பத்தையும் அரசு அரவணைத்து பாதுகாத்து அவர்களை மேன்மேலும் வளர்ச்சியடைய வைக்க வேண்டும் என மண்பாண்ட தொழிலாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## தமிழ்நாட்டில் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய கிறித்துவர்களுக்கான மானியம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்

தேனி, நவ.16-

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும உள்ளடக்கிய 600 கிறித்துவர்கள் பயனடையும் வகையில் ஜெருசலேம் புனிதபயணம் மேற்கொண்டு திரும்பிய 550 கிறித்துவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000/ வீதமும் 50 கன்னியாஸ்திரிகள் /அருள்சகோதரிகளுக்கும் நபர் ஒருவருக்கு ரூ.60,000/ வீதமும் ணிசிஷி முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 01.11.2025 க்கு பிறகு ஜெருசலேம் புனிதபயணம் மேற்கொண்ட கிறித்துவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது www.bcmbcmw.tn.gov.in என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால், முதல்தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு 28.02.2026க்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




## சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்து சிறப்பு விழிப்புணர்வு மனித சங்கிலி

சின்னாளபட்டி, நவ.15-

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்து சிறப்பு விழிப்புணர்வு மனித சங்கிலி நடைபெற்றது ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன் மனித சங்கிலியை துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான சிறப்பு வாக்காளர் திருத்த பணிகள் குறித்தும், வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களை சேர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சிறப்பு மனித சங்கிலி நடைபெற்றது. தேவாங்கர் பள்ளி முன்பு நடைபெற்ற மனித சங்கிலி நிகழ்ச்சிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன் மனித சங்கிலியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி துப்புரவு அலுவலர் மணிகண்டன், தலைமை எழுத்தர் ராமமூர்த்தி, கணக்காளர் கலைச்செல்வி, துப்புரவு மேற்பார்வையாளர்கள் சரளா, அகில்ராஜ், மற்றும் பேரூராட்சி பணியாளர்கள், தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



■ இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி 2026 (SIR) நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான வே.சரவணன் திருச்சி மாவட்டம், துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட காட்சி.




## சபரிமலை கோயில் தங்கம் திருட்டு வழக்கில் அமலாக்கத் துறை கேரள உயர் நீதிமன்றத்தில் முறையீடு

*திருவனந்தபுரம், நவ.16–*

*சபரிமலை கோயில் தங்கம் திருட்டு வழக்கில் அமலாக்கத் துறை கேரள உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் அதிகாரப்பூர்வ எஃப்ஐஆரை வழங்கக் கோரி கேரள ஐகோர்ட்டில் ED மனு தாக்கல் செய்துள்ளது. ஐகோர்ட் மேற்பார்வையில் SITயால் விசாரிக்கப்படுகிறது என ED கோரிக்கையை நிராகரித்து ரன்னி நீதிபதி உத்தரவிட்டார். ஐகோர்ட் மேற்பார்வையில் SITயால் விசாரிக்கப்படுகிறது என ED கோரிக்கையை நிராகரித்து ரன்னி நீதிபதி உத்தரவிட்டார்.*



■ தமிழ் நாடு முழுவதும் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் அனைத்து மாணவ ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். இன்று தாள் 1 ற்கான தேர்வு நடைபெற்றது. இடம் திரவியம் பெண்கள் மேல்நிலைப், காமாலபுரம், நாளை நடைபெறும் தாள் 2ற்கு ஆர்வத்துடன் ஆசிரிய மாணவர்கள் காத்திருக்கிறார்கள்.

# பத்தாளப்பேட்டையில் நெற்பயிர் பாதித்த வயல்களில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு



திருவெறும்பூர், நவ.16-

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள பத்தானப் பேட்டையில் சம்பா நெற்பயிர்கள் பாதிப்பு அடைந்ததை வேளாண் விஞ்ஞானிகள் குழு நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.திருவெறும்பூர் வட்டாரம் பத்தாளப்பேட்டை கிராமத்தில் சம்பா நடப்பு ஆண்டு நடவு செய்த வயல்களில் சுமார் 70 ஏக்கர் சிஆர்.1009 ரகம் பூச்சி, நோய் மற்றும் பாசிப்படர்ந்து பாதிப்புக்கு ஏற்பட்டது. இத்தகவல் வேளா ண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க திருச்சி வேளாண்மை இணை இயக்குநர் வசந்தா கேட்டுக்கொண்டதன் பேரில் திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் சிறுகமணி திட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையில் 4 பேர் கொண்ட விஞ்ஞானிகள் நோயியல் துறை பேராசிரியர் டாக்டர் சேதுராமன், பூச்சியியல் துறை துணை பேராசிரியர் ராதாகிருஷ்ணன், பயிர் மரபியல் துறை பேராசிரியர் ஜெயபிரகாஷ், மண்ணியல் துறை துணை பேராசிரியர் ஜானகி அடங்கிய குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து பாதிப்பிற்கு ஏற்ற பரிந்துரைகளை விவசாயிகளுக்கு வழங்கினார்கள்.

ஆய்வின் போது வேளாண்மை துணை இயக்குநர் (மா.திட்டம் ) கிருஷ்ணமூர்த்தி மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் (தர கட்டுப்பாடு) மாரியப்பன் உடனிருந்தனர். வேளாண்மை இணை இயக்குனர் வசந்தா விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்து பயன் பெறுமாறு பரிந்துரை செய்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000